**<u>அருப்புக்கோட்டை நகராட்சி</u>**

**விளம்பி ஆண்டு சித்திரை மாதம் நாள் : 11.06.2018 திங்கள்கிழமை மாலை 3.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– திருமதி.ரா.ஜெகதீஸ்வரி**

**தனி அலுவலர்**

**பொருள் 1 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட புதுக்கடை பஜார் சாலையின் நுழைவாயில் உள்ள பாலத்தின் அடிப்பகுதியில் மழைநீர் செல்ல இயலாமல் மிகவும் தாழ்வாக உள்ளதால் மழைகாலத்தில் வாறுகாலில் அடைப்பு ஏற்பட்டு மழைநீர் முழுவதுமாக தேஙகி புதுக்கடை பஜார் சாலையில் பொதுமக்கள் செல்ல இயலாத சூழ்நிலை ஏற்படுவதால் மேற்கண்ட பாலத்தை அகற்றி புதிய பாலம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.2.25 இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5270/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

மன்றப்பொருள்அஙகீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.424</u>**

**பொருள் 2 :** 1920ம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 124ன் கீழ் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொழில்வரி விகிதத்தினை 25 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை 01.10.2018 முதல் உயர்வு செய்யப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 21.05.2018ம் நாளிட்ட கடித ந.க.எண்.12503/2018/R1 ன் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட மத்திய மாநில அரசு அலுவலகஙகள், தனியார் நிறுவனஙகள், பள்ளிகள் கல்லூாிகள் மற்றும் வஙகிகள் ஆகிய இதர தொழில்புரியும் நிறுவனஙகளுக்கும் 01.10.2018 முதல் தற்சமயம் உள்ள தொழில்வரி தொகையிலிருந்து 25 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை உயர்வு செய்ய மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>தற்போது உள்ள தொழில்வரி அட்டவனை</u>**

| வ.எண். | அரையாண் டு வருமானம் | 01.10.2013 முதல் திருத்தியமைக்கப்பட்ட தொழில்வரி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 21000 வரை | இல்லை |
| 2. | 21001 முதல் 30,000 வரை | 130 |
| 3. | 30001 முதல் 45000 | 320 |
| 4. | 45001 முதல் 60000 வரை | 640 |
| 5. | 60000 முதல் 75000 வரை | 950 |
| 6. | 75001க்கு மேல் | 1270 |

(i) தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கலாம்

(ii) தொழில்வரி செலுத்துவோரின் ஆட்சேபனை குறித்து தினசரி நாளிதழில் விளம்பரபடுத்துதல்

(iii)தமிழ்நாடு அரசிதழில் விளம்பரப்படுத்துதல்

(iv)தொழில்வரி உயர்வு சதவீதத்தை பரிசோதனை செய்து வரக்கூடிய உயர்வுத் தொகையில் அடுத்த 10 ரூபாய்க்கு (ரூ.10 round off) உயர்வு செய்யலாம்.

(v) அதற்கான உத்தேச செலவுத் தொகையையும் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 5217/2018/அ2

**<u>தீர்மானம் :</u>**

மன்றப்பொருள்அஙகீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.425</u>**

**பொருள் 3 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வார்டு எண் 3 சித்தவைத்திய சாலை அருகில் உள்ள உபயோகமற்ற கழிப்பறை, வார்டு எண் 19 பழைய பேருந்து நிலையத்திற்குள் உழவர் சந்தையில் உள்ள உபயோகமற்ற கழிப்பறை, வார்டு எண் 36 சுப்புராஜ் நகரில் உள்ள உபயோகமற்ற கழிப்பறை மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள கழிப்பறையை இடிப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 5292/2018/இ1

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.426**

**பொருள் 4 :** இந்நகராட்சிக்கு குடிநீர் வழஙகிவரும் நகராட்சிக்கு சொந்தமான திருப்புவனம் தலைமை நீரேற்றும் நிலையம், அஙகாடி மஙகலம் நீரேற்றும் நிலையம், கட்டஙகுடி நீர் உந்து நிலையம், நகரில் மதுரை ரோடு மேல் நிலை தொட்டி வளாகத்தில் உள்ள நீர் உந்து நிலையம் மற்றும் நகரில் அலுவலக வளாகத்தில் உள்ள தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்ட நீர் உந்து நிலையஙகளில் இயஙகிவரும் மின்மோட்டார் பம்பு செட்டுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் மூலம் மேற்க்கொள்ளவும், அதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4.25 லட்சம் (ரூபாய் நான்கு இலட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் மட்டும்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5299/2018/இ2

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.427**

**பொருள் 5 :** இந்நகராட்சிக்கு குடிநீர் வழஙகிவரும் நகராட்சிக்கு சொந்தமான திருப்புவனம் தலைமை நீரேற்றும் நிலையத்தில் இயஙகிவரும் மின்மோட்டார் பம்பு செட்டுகளுக்கு தேவையான ஸ்பேர் மோட்டார்கள் அதன் உதிரி பாகஙகங புதியதாக வாஙகிடவும், அஙகாடி மஙகலம் நீரேற்றும் நிலையத்தில் குறைந்த கொள்ளவு கொண்ட மின்மோட்டார் பம்பு செட் அதன் உதிரி பாகஙகளுடன் வாஙகி புதியதாக பொருத்தும் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.25 லட்சம் (ரூபாய் மூன்று லட்சத்தி இருபத்தி ஐந்து ஆயிரம் மட்டும்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5297/2018/இ2

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.428**

**பொருள் 6 :** இந்நகராட்சிக்கு சொந்மான திருப்புவனம் தலைமை நீரேற்றும் நிலையம், அஙகாடி மஙகலம் நீரேற்றும் நிலையம், கட்டஙகுடி நீர்உந்து நிலையம் நகரில் மதுரை ரோடு மேல்நிலை தொட்டி வளாக நீர் உந்து நிலையம், நகரில் அலுவலக வளாகத்தில் உள்ள தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்ட நீர்உந்து நிலையம் மற்றும நகராட்சி அலுவலகத்தில் இயஙகிவரும் அனைத்து ஜெனரேட்டர் செட்டுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.2.50லட்சம் (ரூபாய் இரண்டு லட்சத்தி ஐம்பது ஆயிரம் மட்டும்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5298/2018/இ2

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.429**

**பொருள் 7 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 26 கதவு எண் 41(1), 41(2) சொத்துவரி பெயர் மாற்றம் சம்பந்தமாக மாரிமுத்து மற்றும் எத்திராஜ் ஆகிய இருவரும் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு எண் O.S.No.2/2018 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையாளர் சார்பாக திரு.D.சங்கரன், வழக்கறிஞர் ஆஜராவதற்கும் மேற்படி வழக்கிற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.7000/– க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 11211/2017/அ2

<u>**தீர்மானம் :**</u>
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
<u>**தீர்மான எண்.430**</u>

**பொருள் 8 :** அருப்புக்கோட்டை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் இயங்கிவரும் அம்மா உணவகத்திற்கு தேவையான சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் டோக்கன் காலியாகும் நிலை உள்ளது. எனவே 1 மாதத்திற்கு தேவைப்படும் சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் இரசீது புத்தகங்கள் 9+9=18 (18,000 இரசீதுகள்) ஆகும். 7 மாதத்திற்கு தேவைப்படும் சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் இரசீது புத்தகங்கள் 63+63=126 (126,000 இரசீதுகள்) ஐ தமிழ்நாடு பல்நோக்கு தொழிற் கூட்டுறவு சஙகம், திருச்சி நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.21,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.7908/2015/அ2

<u>**தீர்மானம் :**</u>
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
<u>**தீர்மான எண்.431**</u>

**பொருள் 9 :** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சியில் பணிபுரியும் திரு.எஸ்.சுந்தரமூர்த்தி, இளநிலை உதவியாளர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூரில் நடைபெறவுள்ள 04.06.2018 முதல் 29.06.2018 வரையிலான பயிற்சி வகுப்பிற்கு கலந்துகொள்ள இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண்.0431/2018/அ3, நாள் 29.05.2018 மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நகராட்சி பணியாளர்களுக்கான விரிவாக்க பயிற்சியில் கலந்துகொள்ள நாள் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் 20 நாட்களுக்கு கட்டணமாக ரூ.20,000/– செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5612/2016/சி1

<u>**தீர்மானம் :**</u>
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
<u>**தீர்மான எண்.432**</u>

**பொருள் 10 :** அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் ஏற்கனவே உள்ள பெண்கள் கழிப்பறை, வருவாய் ஆய்வாளர் அறைகளின் மேற்கூரை, சுற்றுச்சுவர், பழைய நகர்மன்ற அறையின் கழிப்பறை, நிலஅளவையர் அறையின் தளம் ஆகிய இடங்கள் சேதமடைந்து உள்ளது. எனவே மேற்கண்ட அறைகளில் பழுது பணிகள், weathering coarse, pressed tiles, நில அளவையர் அறையில் tiles பதிக்கவும், சுற்றுச்சுவர் அமைக்கவும், கழிப்பறை பழுதுகள் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9.30 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.370, நாள்.14.02.2018ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 31.05.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.S.K.சுப்பாரெட்டியார் அருப்புக்கோட்டை | 0.27% மதிப்பீட்டு விலையை விட குறைவாக |
| 2. | திருமதி.Rபஞ்சவர்ணம் அருப்புக்கோட்டை | 1.50% மதிப்பீட்டு விலையை விட அதிகமாக |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.K.சுப்பாரெட்டியார், அருப்புக்கோட்டை அவர்கள் மதிப்பீட்டு விலையை விட 0.27 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண். 1376/2018/இ1

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.433**

**பொருள் 11 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தெற்கு தெரு மெயின் ரோட்டிலிருந்து மாணிக்கம் தெருவுக்கு நுழையும் வாயிலில் சிறுபாலம் சேதமடைந்து உள்ளது. மேலும் வார்டு எண் 1, 4, 13, 14, 28, 31, 33, 34 ஆகிய வார்டுகளில் சிறுபாலஙகள் மற்றும் வாறுகால்கள் சேதமடைந்து உள்ளது. மேற்கண்ட அனைத்து பணிகளையும் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 4635/2018/இ1

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.434**

**பொருள் 12 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பூஙகாவில் உருவாகும் குப்பைகளை பூஙகாக்குள் உரமாக்க திட்டமிடப்பட்டுள்ளது (On site parking). மேற்கண்ட உரமாக்கும் பணிகள் அஜீஸ்நகர், வசந்தம் நகர், ரயில்வே பீடர் ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள பூஙகாவில் உருவாகும் குப்பைகளை தொட்டி மற்றும் மேற்கூரை அமைத்து உரமாக்க உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5559/2018/இ1

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.435**

**பொருள் 13 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்துவரும் திருமதி.பு.பிரகாஸ்வரி அவர்கள் 01.07.2018 அன்று நடைபெற இருக்கும் தன் மகளின் திருமணத்திற்கு முன்பணம் வழஙகுமாறு 22.05.2018ல் மனுசெய்துள்ளார்.

எனவே அன்னாரின் மகளின் திருமணத்திற்கு திருமண முன்பணம் ரூ.10,000/– யை வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5189/2018/அ1

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.436</u>**

**பொருள் 14 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் ஒப்பந்ததாரராகஇருந்த திரு.பாண்டியராஜ், திரு.சாகுல்ஹமீது அவர்கள், பெரியார்நகர், சத்தியவாணிமுத்து நகர் வாறுகால் மற்றும் ரோடுபணி, சத்தியவாணிமுத்து நகரில் சமுதாயக்கூடம் அமைக்கும் பணிகளுக்கு செலுத்திய முன்வைப்புத் தெகையை திரும்ப வழஙக கோரி 21.11.2017ல் மனு செய்துள்ளார்.

அன்னார் அவர்கள் மேற்கண்ட பணிகள் முடித்து 5வருடஙகளுக்கு மேல் ஆகிவிட்டதால், மேற்படியார் அப்பணிகளுக்கு செலுத்திய முன்வைப்புத் தொகை ரூ.46,620/– மற்றும் ரூ.20,000/–யை ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.10454/2017/அ1

**<u>தீர்மானம் :</u>**
மன்றப்பொருள்அஙகீகரிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.437</u>**

**பொருள் 15 :** விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 4 நெசவாளர் காலனி 9வது தெருவில் மின்னல் மற்றும் மழையினால் கருகிய வேப்பமரத்தை அகற்றுவதற்கு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் கடித எண் மூ.மு.அ3/7993/2018 நாள் 03.04.2018 ன்படி முறையான அனுமதி பெறப்பட்டுள்ளதால் மேற்கண்ட வேப்பமரத்தினை பொது ஏலம் விட்டு அகற்றுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.3138/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**
மன்றப்பொருள்அஙகீகரிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.438</u>**

**பொருள் 16 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 28 நாகலிஙகா நகர், முல்லை நகர், வார்டு எண் 26 ஆயிரம் கண் மாரியம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் தளம் மற்றும் வாறுகால் அமைக்கும் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ2.75/– இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5556/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**
மன்றப்பொருள்அஙகீகரிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.439</u>**

**பொருள் 17 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பொது சுகாதாரப்பிரிவு TN67E7958 வாகனத்திற்கு தகுதிச்சான்று 09.07.2018 அன்று முடிவடைவதால் தகுதிச்சான்று பெறுவதற்கும் வாகனத்தில் உள்ள பழுதுபணிகள் பார்ப்பதற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.45000/–ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5017/2018/எச்2

**<u>தீர்மானம் :</u>**
மன்றப்பொருள்அஙகீகரிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.440</u>**

**பொருள் 18 :** கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சியிலிருந்து 2016–2017 மற்றும 2017–2018 ஆகிய ஆண்டுகளுக்கு செலுத்த வேண்டிய பஙகளிப்பு தொகை ரூ.1,00,000/– செலுத்தக்கோரி மேற்படி நிறுவனத்தின் கடிதம் ந.க.எண்.359/2017/அ2, நாள் 16.05.2018 மூலம்

கோரப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி மூலம் மேற்படி இரண்டு நிதியாண்டுகளுக்கும் செலுத்தப்படவேண்டிய ரூ.1,00,000/— வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5612/2017/சி1

**தீர்மானம் :**

மன்றப்பொருள்அஙகீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.441**

**பொருள் 19 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயஙகிவரும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனஙகள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகஙகள் தவிர அனைத்து கல்வி நிறுவனஙகளுக்கும், சொத்துவரி நிர்ணயம் செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண் 395ல் நாள் 28.03.2018ல் அனுமதி வழஙகப்பட்டது. மேற்படி பொருள் தொடர்பாக சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனஙகள் இது குறித்து ஆட்சேபனை ஏதும் இருந்தால் 30 நாட்களில் தெரிவிக்ககோரி தினசரி நாளிதழ் மாலை முரசில் 07.04.2018ல் பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி இவ்வறிவிப்பு தொடர்பாக எந்த ஒரு ஆட்சேபனையும் வரபெறாததால் இவ்அறிக்கையினை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கு ஆகும் செலவீன தொகை ரூ.6300/— யை அவசர அவசியம் கருதி அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து செலவு செய்ததையும் மன்றம் அனுமதிக்காலம்.

ந.க.எண். 282/2018/அ1

**தீர்மானம் :**

மன்றப்பொருள்அஙகீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.442**

**பொருள் 20 :** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் (TURIP 2017-18) ன் கீழ் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் **21422/2017/இ3** நாள் 03.10.2017 ன் படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் 04.04.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திருமதி.N.காத்தூன்பீவி<br>அருப்புக்கோட்டை | 4.97 % மதிப்பீட்டு<br>விலையைவிட அதிகமாக |
| 2. | திரு.S.ஹர்சவர்த்தனன்<br>அருப்புக்கோட்டை | **20.65%** மதிப்பீட்டு<br>விலையைவிட விட அதிகமாக |
| 3. | திரு.S.K.சுப்பாரெட்டியார்<br>அருப்புக்கோட்டை | **16.42%** மதிப்பீட்டு<br>விலையைவிட விட அதிகமாக |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 4.97% அதிகமாக கொடுத்துள்ள திருமதி.N.காத்தூன்பீவி, அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

ந.க.எண். 8939/2017/இ1

**தீர்மானம் :**

மன்றப்பொருள்அஙகீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.443**

**பொருள்21 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் 2016–17ம் நிதியாண்டுக்கான தணிக்கை மற்றும ஆண்டுக் கணக்குகள் தயார் செய்து முடிந்த வகைக்கு தொகை ரூ.35,000/– (முப்பத்து ஐந்து ஆயிரம்) ஐ திரு.N.சீனிவாசன் CA அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 2018/இ1

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.444**

**பொருள்22 :** விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிக்கை ப.வெ.அ4/4140/2018 நாள் 08.06.2018ல் மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து அரசு பணியாளர்களும் 11.06.2018 முதல் கட்டாயமாக பணியாளர் அடையாள அட்டை அனிந்து பணிக்கு வரவேண்டும் என தெரிவித்துள்ளார். அதன்படி அருப்புக்கோட்டை நகராட்சி அனைத்து பணியாளர்களுக்கும் அடையாள அட்டை தயாரித்து வழஙகுவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.50,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5780/2018/சி1

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.445**

**பொருள் 23 :** இந்நகராட்சி பொறியியல் மற்றும் இதரப்பிரிவுகளில், தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டவிதி 15ன் கீழ் அவசர அவசியம் கருதி பணிகள் செய்து முடிக்கப்பட்ட விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | வேலை விபரஙகள் | பணிகள் செய்த நிறுவனத்தின் பெயர் | செலவுத் தொகை |
|---|---|---|---|
| 1. | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொசு ஒழிப்பு பணிக்காக பயன்படுத்தப்படும் Vehicle Fogging machine புதியதாக வாஙகுவதற்கு | Newtron pest control service triplicane Chennai | Rs.11,500/- |
| 2. | பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான கொசு ஒழிப்பு இயந்திரஙகளான Outdoor fogging machine இயந்திரம் பழுதுநீக்கம் செய்வதற்கு | Systems Engineering work Chennai | Rs.20970/- |
| 3. | பொது சுகாதாரப்பிரிவு தேவையான சுண்ணாம்புதூள் வாஙகுவதற்கு | Sri Kondammal limes, Aruppukottai | Rs.30000/- |
| 4. | Repairing work of 1x36W CFL Street light @ 1 to 36 wards in amc limit | Veena Enterprises, Tirunelveli | Rs.20500/- |
| 5. | Thirupuvanam Headwork infiltreation well 7.5HP motor & 10" dia Borewell 10HP motor in Thirupuvanam headworks | M.Kasiviswanathan, Aruppukottai | Rs.15400/- |
| 6. | Repair work of 25HP Unit II motor at L& T sump in municipal office premises @ Aruppukottai Municipal | M.Kasiviswanathan, Aruppukottai | Rs.26100/- |
| 7. | Repair and change the engine pump & nacil pump in TN67A9212 | Sri Manojkumar Automobiles | Rs.29000/- |
| 8. | Repair work of Engg section vehicle TN67F9587 | Sri Manojkumar Automobiles | Rs.58800/- |
| 9. | அருப்புக்கோட்டை நகராட்சி உரக்கிடஙகில் வின்ட்ரோஸ் மற்றும் அதனை சுற்றியுள்ள இடஙகளில் குப்பைகளை JCB மூலம் அகற்றுவது தொடர்பாக | செல்லியம்மன் எர்த் மூவர்ஸ் B.சுபாஷ், சொக்கலிஙகபுரம், அருப்புக்கோட்டை | Rs.29600/- |
| 10. | Repair work of 2 HP motor of Old Bus Stand Toilet in Aruppukottai Municipality | R.Panjavarnam, Aruppukottai | Rs.29900/- |

ந.க.எண். 1620/2017/இ1

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.446**

பொருள் 24 : அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தனியார்மயம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.27973/17/தி3 நாள் 20.12.2017ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி 20.04.2018 அன்று மேற்படி தனியார்மயம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் தகுதியான ஒப்பந்தபுள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | Malar Clean and Green PVT LTD, Sankaran Kovil | மதிப்பீட்டு விலையை விட 3.47% அதிகமாக |

வரப்பெற்ற தகுதியான ஒரு ஒப்பந்தபுள்ளியான Malar Clean and Green PVT LTD, Sankaran Kovil ஐ ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 11734/2015/எச்1

**தீர்மானம் :**

மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.447**

பொருள் 25 : அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசுபள்ளிகள் மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகம் பராமரிப்பு போன்ற துப்புரவு பணிகள் தனியார் மூலம் மேற்கொள்ள இந்நகராட்சி நகர்மன்ற தீமான எண் 318 நாள் 30.11.2017ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி 20.04.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் தகுதியான ஒப்பநத்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | Malar Clean and Green PVT LTD, Sankaran Kovil | மதிப்பீட்டு விலையை விட 1.54% அதிகமாக |

வரப்பெற்ற தகுதியான ஒரு ஒப்பந்தபுள்ளியான Malar Clean and Green PVT LTD, Sankaran Kovil ஐ ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 9624/2017/எச்1

**தீர்மானம் :**

மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.448**

பொருள் 26 : உதவிநிர்வாகப் பொறியாளர், கி.கு.தி.உப.கோட்டம், அருப்புக்கோட்டை அவர்களின் கடித எண்.கோ.குடிநீர் கட்டணம்/உநிபொ/வி/2018 நாள் 31.05.2018 ன்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள குடிநீர் திட்டஙகள் மூலம் பெறப்படும் குடிநீருக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (W52)துறை அரசு ஆணை எண்39, 17.04.2018ன்படி தற்போது செலுத்தப்பட்டுவரும் 1000லிட்டருக்கு ரூ.4.50/— வீதம் உள்ள குடிநீர் கட்டணத்தினை மாற்றி 01.12.2017 முதல் 31.03.2018 வரை 1000 லிட்டருக்கு ரூ.9.00/— வீதம் செலுத்த கோரியும், மேலும் வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டு தோறும் 5 சதவீதம் கூடுதலாக நிர்ணயம் செய்து கேட்பு எழுப்பும்படி ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும் அரசு ஆணையை அடிப்படையாக கொண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தற்போது எழுப்பப்பட்டுள்ள கேட்பு பட்டியலின் படி தொகையினை தொடர்ந்து செலுத்துவதற்க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 3462/2001/இ1

**தீர்மானம் :**

மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.449**